# மக்காச்சோளத்தின் விலை நிலையாக இருக்கும்

மக்காச்சோளம் 2013-14 ஆம் ஆண்டில் 9.43 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 24.35 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. கர்நாடகா, ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். இந்தியாவிலிருந்து மக்காச்சோளம் இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2013-14ம் ஆண்டில் மக்காச்சோளம் 0.30 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 1.6 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் கரீப் பருவ மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். தற்போது, தமிழ்நாட்டில் முக்கிய மக்காச்சோளம் பயிரிடும் மாவட்டங்களிலிருந்து வரும் வரத்து முடிவடைந்த நிலையில், ஒடிசாவிலிருந்து வரத்து துவங்கியுள்ளது. கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து ஜுலை மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து சந்தைக்கு வரத் துவங்கும். தற்போதைய நிலையில் நல்ல தரமான மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1,340 முதல் ரூ.1,350 வரை உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில், அறுவடை காலமான அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வரும் கரீப் மக்காச்சோளத்தின் தேவையானது தீவனம் மற்றும் தொழிற்சாலை பயன்பாடுகளுக்கான மூலப்பொருள் தேவையை நிறைவு செய்கிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 22 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

பொருளாதார அளவைகளின் அடிப்படையில், தரமான கரீப் மக்காச்சோளத்தின் விலை அறுவடை காலமான அக்டோபர் – நவம்பர், 2015 குவிண்டாலுக்கு ரூ.1,300 – ரூ.1,320 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், மக்காச்சோள விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி :- 0422 -2431405


**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**


பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் :- 0422-2450507